# அடுக்குத்தொடர் – இரட்டைக்கிளவி

**1.0.** அடுக்குத்தொடர்: தமிழில் சில குறிப்பிட்ட சூழலில் ஒரே சொல் அடுத்தடுத்து மீண்டும் வரும். 'பாம்பு பாம்பு' என்று ஒருவர் ஒரே சொல்லை இரண்டுமுறை அடுத்தடுத்துக் கூறியதற்குக் காரணம், பாம்பைக் கண்டு அவருக்கு ஏற்பட்ட அச்சமும் காரணமாக இருக்கலாம்; மற்றவர்களை எச்சரிப்பதற்காகவும் இருக்கலாம்.

**2.0.** அச்ச உணர்வு, சினத்தின் வெளிப்பாடு, அவலத்தின் குரல் போன்ற பலவகை மனித உணர்வுகள் அடுக்குத்தொடருக்குக் காரணமாகும்.

(எ-கா.)

அச்ச உணர்வு : 'தீத்தீ' 'பாம்புபாம்பு'

சின வெளிப்பாடு : 'போபோ'

அவலம் ; 'ஐயோஐயோ'

**2.1.** இவ்வாறு அடுத்தடுத்துக் கூறப்படுகிற சொற்கள் பெயர்ச்சொல்லாகவும் இருக்கலாம்; வினைச்சொல்லாகவும் இருக்கலாம்! இடைச்சொல்லாகவும் இருக்கலாம்; உரிச்சொல்லாகவும் இருக்கலாம்.

**2.1.** அடுக்குத்தொடர்களில் வருகிற சொற்கள் ஒரே சொல்லாக இருந்தாலும் அவற்றிக்கிடையில் பொருள் தொடர்பு கிடையாது. எனவே இவற்றைத் தனிச்சொல்லாகக் கருதமுடியாது. ஆகவேதான் இதை 'அடுக்குத்தொடர்' என்று அழைப்பர். இதில் இரண்டு வகைகள் உள்ளன, ஒன்று, இசைக்காகச் சொற்களை அடுக்கிச் சொல்லுதலாகும். இதில் நான்கு எண்ணிக்கைவரை அடுக்கிவரலாம்; விரைவுக்காக வரும் அடுக்குத்தொடரில் சொற்களின் எண்ணிக்கையின் உயரெல்லை மூன்று சொற்கள் ஆகும்.

(எ-கா.) 'பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ' - இசைநிறை

'வலிமை அற்ற தோளினாய் போ போ போ'

மார்பிலே ஒடுங்கினாய் போ போ போ'

(பாரதியார்)

**2.2.** தொல்காப்பியர் நன்னூலார் இருவருமே இதுபற்றிக் கூறியுள்ளார்கள்.

'இசைப்படு பொருளே நான்கு வரம்பாகும்'

(தொல். சொல். எச்ச. 423)

'அசைநிலை பொருள்நிலை இசைநிறைக்கு ஒருசொல்
இரண்டு மூன்று நான்கு எல்லைமுறை அடுக்கும்'

(நன். சொல். பொது. 395)

**3.0.** இரட்டைக்கிளவி: வெளித்தோற்றத்தில் அடுக்குத்தொடர்போன்று ஒரே சொல் இரண்டுமுறைகள் அடுத்தடுத்து வரும் ஒன்றுதான் இரட்டைக்கிளவி ஆகும். ஆனால் இது அடுக்குத்தொடரிலிருந்து வேறுபட்ட, மாறுபட்ட ஒன்றாகும்.

**3.1.** 'கலகல', 'சடசட', விறுவிறு', 'படபட', 'தடதட', 'கடகட போன்ற இரண்டுசொற்கள் தோற்றத்தில் இரண்டு சொற்கள்; ஆனால் இரண்டும் இணைந்துவரும்போதுதான் ஒரு பொருளைக் குறிப்பாக வெளிப்படுத்தும்.

**3.2.** 'கலகல' என்பதை 'கல', 'கல' என்று பிரித்தால் 'கலகல' என்பதற்கான பொருள் கிடைக்காது. ஒரு குறிப்புப் பொருளைத் தரும் ஒரு சொல்தான் இது; தொடர் கிடையாது.

**3.3.** இரண்டு சொற்கள் இணைந்தால் கிடைப்பதுதான் தொடர்; ஆனால் 'கலகல' போன்றவை ஒரு குறிப்புப்பொருளைத் தருகிற – ஒரு சொல் பண்புடைய – ஒரு சொல்லே இது; தொடர் கிடையாது.

**3.4.**

| |
|---|
| "விரைசொல் அடுக்கே மூன்று வரம்பாகும்"<br>(தொல். சொல். எச்ச. 424)<br><br>"இரட்டைக்கிளவி இரட்டின் பிரிந்து இசையா"<br>(நன். சொல். பொது. 395) |

**3.5.** எடுத்துக்காட்டுகள்: சலசல, தடதட, குடுகுடு, படபட, பளபள, கடகட, கசகச, வழவழ